Deutsche Bank

வாடிக்கையாளர் சாசனம் முக்கிய தகவல்கள் ஆவணம்

டொய்ஷ் பேங்க் ஏஜி கொழும்புக் கிளை

இலங்கை மத்திய வங்கியால் 2011 ஒக்டோபர் 05ஆம் திகதி வெளியிடப்பட்ட உரிமம் வழங்கப்பட்ட வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் தொடர்பான 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் வழிகாட்டுநெறிகள்

(மீளாய்வு – ஜூன் 2025)

அறிமுகம்

2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் வழிகாட்டுநெறிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட வாடிக்கையாளர் சாசனம், உரிமம் பெற்ற வணிக வங்கிகளுடன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்களால் எதிர்பார்க்கப்படும் நியாயமான வங்கி நடைமுறைகளின் முக்கிய தரநியமங்களை விபரிக்கின்றது.

வாடிக்கையாளர் சாசன வழிகாட்டுநெறிகளின்படி எங்கள் தயாரிப்புகள்/சேவைகளைத் தேடும் வாடிக்கையாளர்களுக்கு எங்கள் இணையத்தளத்தில் முக்கிய தகவல்கள் ஆவணத்தை வெளியிட நாங்கள் கட்டாயப்பட்டுள்ளோம்.

இந்த முக்கிய தகவல் ஆவணமானது, நாங்கள் வழங்கும் வங்கித் தயாரிப்புக்களில்/சேவைகளில் இருந்து உங்களுக்குத் தேவையான மற்றும் பொருத்தமான தயாரிப்பை/சேவையை தேர்வுசெய்வதற்கு உங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தயாரிப்புக்கள்/சேவைகள்

டொய்ஷ் பேங்க் ஏஜீ, கொழும்புக் கிளை ("DB கொழும்பு") கூட்டாண்மை வங்கி (CB) மற்றும் உலகளாவிய வளர்ந்து வரும் சந்தைகள் (GEM) தொடர்பான வணிகங்களை மேற்கொள்கிறது. DB கொழும்பு ஆனது தனியார் வாடிக்கையாளர்கள் மற்றும் சொத்து முகாமைத்துவம் தொடர்பான வங்கி வணிகத்தில் ஈடுபடுவதில்லை.

உலகளாவிய பரிவர்த்தனை வங்கி மற்றும் உலகளாவிய வளர்ந்து வரும் சந்தைகள் (GEM)

- CB - வர்த்தக நிதி மற்றும் பண முகாமை கூட்டாண்மைகள்
- CB - பிணைப்பத்திர சேவைகள்
- GEM - வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை
- GEM - நிலையான வருமானம்

எங்களால் வழங்கப்படும் மேலே கொடுக்கப்பட்டுள்ள தயாரிப்புகள்/சேவைகள் பற்றிய கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கிய தகவல்களை மேலதிக குறிப்பீட்டிற்காக பார்க்கவும்.

Deutsche Bank

முறைப்பாடுகளுக்கான படிமுறைகள்

எங்களால் வழங்கப்படுகின்ற தயாரிப்புகள்/சேவைகள் தொடர்பில் எவையேனும் முறைப்பாடுகள் இருந்தால், எங்களைத் தொடர்பு கொள்ளவும். உங்கள் முறைப்பாட்டிற்கு நாங்கள் பதிலளிப்போம்.

முறைப்பாடுகளுக்காக எங்கள் தொடர்பு விவரங்கள் மற்றும் எங்கள் வாடிக்கையாளர் முறைப்பாடுகள் செயன்முறை வேறு தனியான இணைப்பில் தரப்பட்டுள்ளது.

Deutsche Bank

டொய்ஷ் பேங்க் ஏஜீ, கொழும்புக் கிளை
உலகளாவிய வளர்ந்து வரும் சந்தைகள் மீதான முக்கிய தகவல்கள் - வெளிநாட்டு நாணயமாற்றல் மற்றும் நிலையான வருமானம்.

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
வெளிநாட்டு நாணய தாள்கள் - பௌதீக தாள்களின் விற்பனை / கொள்வனவு	வெளிநாட்டுப் பயணத்திற்கு மாத்திரம்	கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுக்கு மாத்திரம். **தேவையான ஆவணங்கள்** - செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, விமான பயணச் சீட்டு, அறிவுறுத்தல் கடிதம், ஏற்புடையதாக இருந்தால்/தேவைப்படுகின்ற போது படிவம் 1 மற்றும் 2	வெளிநாட்டு நாணயக் குற்றிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பயணத்தின் நோக்கம், வகை மற்றும் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் விடுவிக்கப்படும் வெளிநாட்டு நாணயத்தின் தொகையைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச ஒழுங்குறுத்துகை வரம்பு வெளிநாட்டு நாணய விற்பனைக்கு ஏற்புடையதாகும். (யூரோ 1,000 அல்லது அதற்கு இணையான தொகையை மீறும் வெளிநாட்டு நாணய (FCY) வைப்புக்களுக்கு மேலதிக உரிய கவனிப்புகள் (due diligence) ஏற்புடையதாகும். ஏத்தகைய நாணயத் தாள்களை ஏற்றுக் கொள்தல் வங்கியின் தீருமானத்தைப் பொறுத்தாகும்	நாணயத் தாள்கள் விற்பனைக்கு மாத்திரம் தரகு சதவீதம் ஒன்று பிரயேகிக்கப்படலாம்
வெளிநாட்டுக்கு பணம் அனுப்புதல்- இலங்கையிலிருந்து வேறு நாட்டிற்கு வெளிநாட்டு நாணயத்தின் தந்திப் பரிமாற்றம்.	பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன பரிவர்த்தனைகளுக்கு எதிரான கொடுப்பனவுகளுக்காக	கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம். பணம் அனுப்புகையின் வகையைப் பொறுத்து தேவைப்படும் ஆவணங்கள் மாறுபடும். தயவு செய்து வங்கியைத் தொடர்பு கொள்ளவும்.	வெளிநாட்டு நாணய வங்கிப்பிரிவு நிலை வாடிக்கையாளர்களுக்கு நிபந்தனைகள் வேறுபடலாம். நடைமுறை மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன பரிவர்த்தனைகளுக்கு மாத்திரம். பணம் அனுப்புதலானது ஏற்புடைய உள்நாட்டு மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கு உட்பட்டது. கட்டணம் செலுத்தும் நோக்கம் கட்டாயமாகும்.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

Deutsche Bank

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
நாட்டுக்கு பணம் அனுப்புதல் - இலங்கையிலுள்ள பயனாளி ஒருவருக்கு தந்திப் பரிமாற்றம் ஊடாக இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து வெளிநாட்டு நாணயத்தின் பெறுகை.	பயனாளியின் வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது இலங்கை ரூபாய்க் கணக்கில் வரவு வைக்க வேண்டும்	கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம். வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு தகைமைத் தகுதிவிதி ஏற்புடையதாகும்	பணம் அனுப்புதலானது ஏற்புடைய உள்நாட்டு மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கு உட்பட்டது கட்டணம் செலுத்தும் நோக்கம் கட்டாயமாகும்.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
வெளிநாட்டு நாணய பணம் / டொம் / உடனடி பரிமாற்றல் - இரண்டு வணிக நாட்கள் வரை தீர்ப்பனவுக்காக ஒரு நாணயத் தொகையை மற்றொரு நாணயமாக மாற்றுவதற்கு மாற்றல் விகிதம் ஏற்புடையதாகும்.	உள்நோக்கிய/வெளிநோக்கிய பணம் அனுப்புதல் மற்றும் உள்நாட்டு கொடுப்பனவுக் கடப்பாடுகள்.	கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம்.	அடிப்படையான வணிகப் பரிவர்த்தனை மற்றும் கொடுப்பனவு தேவைப்படுகின்ற நோக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.	பரிமாற்றத்திற்கு கட்டணம் இல்லை. எனினும், பணம் அனுப்புதல் ஏதேனும் இருந்தால் பணம் அனுப்பும் கட்டணங்கள் ஏற்புடையதாகும்.
முன்னோக்கிய வெளிநாட்டு நாணய மாற்றல்- நாணயம் ஒன்றை வேறொரு நாணயத்திற்கு எதிர்காலத் திகதியொன்றில் பரிமாற்றம் செய்வதற்கு இன்று உடன்பட்ட ஒரு நாணய மாற்றல் வீதம்	நடைமுறை மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன பரிமாற்றலுக்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற வர்த்தக பரிமாற்றல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இடர்நேர்வில் இருந்து எழுகின்ற எதிர்கால வெளிநாட்டு நாணய இடர்நேர்வை காப்பளிப்பதற்கு	கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம். கீழ்க் குறிப்பிடப்படுகின்ற பரிமாற்றல்கள் அல்லது மதிப்பிடப்பட்ட பரிமாற்றல் பெறுமதியின் நிரூபனத்திற்காக சமர்ப்பனம்.	# வங்கிக் கடன் வரம்பு. # ஐரோப்பிய சந்தை உட்கட்டமைப்பு ஒழுங்குவிதி (EMIR) முடிப்புச் சான்று. # (FX) ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு கையொப்பமிடுபவர்களை அங்கீகரிக்கும் பணிப்பாளர் சபைத் தீர்மானம். # காப்பளிக்கப்பட்ட தொகையானது இடர்நேர்வுத் தொகை மற்றும் இடர்நேர்வுக் காலத்தை விஞ்சக் கூடாது. # அடிப்படை ஒப்பந்தத்தின் காலக்கெடுவுடன் (tenor) ஒப்பந்தங்களின் நீடிப்பு அனுமதிக்கப்படும் (வரலாற்று விகிதங்களுக்கு நீடிப்பு அனுமதி இல்லை), # சட்ட நிறுவன அடையாளங்காட்டி # பொறுப்பேற்றல்/ பிரதிநிதித்துவ கடிதம் # டொட்-பிரான்க் சுய வெளிப்படுத்தல் கடிதம் # முன்கூட்டிய பாதுகாப்பு (forward hedges) ஏற்பாடுகளில் பகுதி /	இல்லை

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
			முழுமையான திரும்பப்பெறல் (drawdown) அனுமதிக்கப்படுகின்றது.	
வெளிநாட்டு நாணய இடமாற்றம் - இரண்டு வித்தியாசமான திகதிகளில் ஒரு நாணயத்திற்கு எதிராக மற்றொரு நாணயத்தின் ஒத்த தொகை ஒன்றின் ஒரே நேரக் கொள்வனவு மற்றும் விற்பனை	அனுமதிக்கப்பட்ட பரிமாற்றல்களிருந்து இரண்டு வெவ்வேறு காலகட்டங்களில் எழுகின்ற ஒரு நணயச் சோடியின் எதிர் இடர்நேர்வைக் காப்பளிப்பதற்கு	கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம். முக்கிய பரிமாற்றல்களின் நிரூபனத்தின் சமர்ப்பனம்.	# வங்கி கடன் வரம்பு # (EMIR) முடிப்புச் சான்று # (FX) ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு கையொப்பமிடுபவர்களை அங்கீகரிக்கும் பணிப்பாளர் சபைத் தீர்மானம் # காப்பளிக்கப்பட்ட தொகையானது இடர்நேர்வின் தொகை மற்றும் இடர்நேர்வுக் காலத்தை விஞ்சக் கூடாது # அடிப்படை ஒப்பந்தத்தின் காலக்கெடுவுடன் (tenor) ஒப்பந்தங்களின் நீடிப்பு அனுமதிக்கப்படும் (வரலாற்று விகிதங்களுக்கு நீடிப்பு அனுமதி இல்லை), # சட்ட நிறுவன அடையாளங்காட்டி # பொறுப்பேற்றல்/ பிரதிநிதித்துவ கடிதம் # டொட்-பிரான்க் சுய வெளிப்படுத்தல் கடிதம்	இல்லை

குறிப்பு 1 - வங்கி இந்த சேவைகளை கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

குறிப்பு 2 – குறிப்பிட்ட வங்கிக் கட்டணங்கள் உட்பட, வங்கி வழங்கும் மேற்கூறிய சேவைகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை முழுமையாகத் தெரிந்துகொள்வதற்கு **+94-11 4791 256/258** என்ற இலக்கத்திற்கு வெளிநாட்டு நாணய (FX) விற்பனை மையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

Deutsche Bank

டொய்ஷ் பேங்க் ஏஜீ, கொழும்புக் கிளை

வர்த்தக நிதி - காசு முகாமை கூட்டாண்மைகள் தொடர்பான முக்கிய தகவல்கள்

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
டொய்ஷ் பேங்க் செலுத்த வேண்டிய முகாமைத் தீர்வுகள்: - தனித்தனியாக செயன்முறைப்படுத்துகின்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச கொடுப்பனவுகள் மற்றும் வங்கியின் பற்றுச் சீட்டு வழங்கல்கள் மற்றும் கூட்டாண்மை காசோலைகள், மத்திய வங்கி பரிமாற்றங்கள், கோரிக்கை வரைவுகள், தந்தி பரிமாற்றங்கள், உரிய நேர மொத்த தீர்ப்பனவு (RTGS), பொதுவான இலத்திரனியல் நிதிப் பரிமாற்றம் (CEFTfs), இலங்கை வங்கிகளுக்கிடையோயான கொடுப்பனவு முறை (SLIPS) கொடுப்பனவுகள்	- வாடிக்கையாளரின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தலின் செயற்திறனை துரிதப்படுத்தவும் மேம்படுத்தவும் வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்	- அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட கம்பனியிலிருந்து கோரிக்கைகள். சர்வதேச கொடுப்பனவுகளுக்காக கீழ்க்குறிப்பிட்ட பரிமாற்றலின் நிரூபனத்தை சமர்ப்பிக்க வேண்டும்	கொடுப்பனவை செலுத்துவதற்கு அல்லது இருக்கக்கூடிய கடன் வசதியை செயல்படுத்த கணக்குகளில் நிதி இருப்பு. வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களின்படி டொய்ஷ் வங்கி பரிவர்த்தனையைச் செயல்படுத்தும். பொது வங்கி நிபந்தனைகள் ஆவணத்தையும் பார்க்கவும்.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
டொய்ஷ் வங்கி பெறப்பட வேண்டிய முகாமை தீர்வுகள்: - CEFTs ஐ பயன்படுத்தி நேரடி பற்றுக்கள் (Direct Debits) மூலம் இலத்திரனியல் சேகரிப்புக்களுக்கு வசதி செய்தல். - வங்கியில் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் குறிப்பிட்ட கணக்குகளில் சேகரிக்கப்பட்ட காசோலைகளுக்கு பணத் தொகைகளை வரவு வைத்தல்	- வாடிக்கையாளரின் பெறுவனவுகளை செயன்முறைப்படுத்தலின் செயற்திறனை துரிதப்படுத்தவும் மேம்படுத்தவும் வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்	- வாடிக்கையாளர் மற்றும் வங்கி மற்றும்/அல்லது மூன்றாம் தரப்பு வங்கி ஆகியோருக்கிடையில் ஒரு உடன்படிக்கையை/நேரடி கடன் பணிப்பாணையொன்றை நிறைவேற்றுதல்.	- தரப்பினர்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ், வங்கியால் வழங்கப்பட வேண்டிய சேவைகளின் உள்ளடக்கத்தைப் (scope of services) பொருத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அமையும். - தயவு செய்து பொது நிபந்தனைகள் ஆவணத்தை பார்க்கவும்.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

டொய்ஷ் வங்கி ஊடகம் மற்றும் தகவல் தீர்வுகள்: - அனைத்து வாடிக்கையாளர்களின் அறிவுறுத்தல்களையும் இலத்திரனியல் ரீதியாக செயல்படுத்த ஒரு தனியான தளம்	- தாள்களற்ற, பாதுகாப்பான, ஆபத்தற்ற வேகமான பரிமாற்றல் முறை	- வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையே ஒரு உடன்படிக்கையை நிறைவேற்றுதல். - ஆதரிக்கின்ற சபைத் தீர்மானம்.	- தயவு செய்து இலத்திரனியல் வங்கி சேவையை நிர்வகிக்கும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும். - பொது நிபந்தனைகள் ஆவணத்தையும் பார்க்கவும்	வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையில் ஒப்புக் கொள்ளப்பட்டவாறு மாதாந்த கட்டணம்.
வைப்புக் கணக்குகள்:	சுயாதீனமான நிதிகளின் வருமானத்தை உச்சப்படுத்துவதற்கான ஒரு தீர்வு.	- வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையே ஒரு உடன்படிக்கையை நிறைவேற்றுதல். - பராமரிக்கப்பட வேண்டிய பற்று இருப்புடன் ஒரு கணக்கு.	- கணக்கைப் பொறுத்து குறைந்தபட்ச இருப்பு பராமரிக்கப்பட வேண்டும். - வைப்பு காப்பீடு (Deposit Insurance) "வைப்பு தகவல் தாள்" (Deposit Information Sheet) இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது கணக்கு திறக்கும் போது வழங்கப்படும். - கணக்கின் செயல்பாடு தொடர்பான வழிகாட்டலுக்காக (திறப்பு, மூடல், காலத்திற்கு முன்பான பணம் எடுத்தல், செயலற்ற கணக்குகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், கைவிடப்பட்ட சொத்துகள் உட்பட), தொடர்புடைய தயாரிப்பு ஒப்பந்தங்களையும் பார்க்கவும் மற்றும் உறவு முகாமையாளரைத் (Relationship Manager) தொடர்பு கொள்ளவும். - அங்கீகரிக்கப்படாத அல்லது தவறான பரிவர்த்தனைகள் தொடர்பாக சேவை முகாமையாளரை (Service Manager) தொடர்பு கொள்ளவும். - தயவுசெய்து பொது நிபந்தனை ஆவணத்தையும் பார்க்கவும்	அபராதங்கள், குறைந்தபட்ச இருப்புத் தொகை தேவைப்பாடுகள், ஏனைய கட்டணங்கள், சேவைச் செலவுகள் மற்றும் தரகுகள் தொடர்பாக "பிரதான வைப்பு உடன்படிக்கையை" பார்க்கவும் மற்றும் உறவு முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்
டொய்ஷ் வங்கி வர்த்தகத் தீர்வுகள்:				
கடன் கடிதங்கள்: நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்களுக்கு எதிராக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் குறிப்பிடப்பட்ட தொகையை குறிப்பிட்ட இடத்தில் அல்லது நிர்ணயிக்கக்கூடிய எதிர்கால திகதியில் கொள்வனவாளரின் வேண்டுகோள் மற்றும் அறிவுறுத்தல்களின் பேரில் விற்பனையாளருக்கு வங்கியொன்றால் வழங்கப்பட்ட எழுத்து மூல பொறுப்பேற்பு.	பரிமாற்றல்களுக்கு வசதி செய்தல்	- வங்கியால் வழங்கப்பட்டு மற்றும் வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதி. - முன்கூட்டிய விலைப்பட்டியல் (Performa Invoice) மற்றும் தொடர்புடைய ஆதார ஆவணங்கள் என்பவற்றுடன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்கள் கையொப்பமிட்ட அல்லது பொருள் விலைப்பட்டியலுடன் டிஜிட்டல் தளத்தில் பிறப்பிக்கப்பட்ட தொடர்புடைய விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்தல்	- பொது நிபந்தனை ஆவணம், வசதி லிருப்பறிவிப்புக் கடிதம் மற்றும் ஆதரவளிக்கின்ற ஆவணங்கள் என்பவற்றையும் பார்க்கவும் - அமுலில் உள்ள சீரான மரபு நடைமுறை அண்மைய பதிப்பின் ஆளுகைக்கு உட்படுகின்றது.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

ஆவண சேகரிப்புக்கள்: இறக்குமதி ஆவண சேகரிப்பு என்பது ஒரு வர்த்தக நிதி தீர்வாகும். இதில், ஏற்றுமதியாளரின் வங்கி கப்பல் மற்றும் உரித்து ஆவணங்களை இறக்குமதியாளரின் வங்கிக்கு அனுப்புகிறது. அந்த ஆவணங்கள், இறக்குமதியாளருக்கு பணம் செலுத்துதல் அல்லது பரிமாற்ற பட்டியல் (Bill of Exchange) ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இந்த முறையினால் இடரும் கட்டுப்பாடும் சமநிலைப்படுத்தப்படுகின்றன் இதன் மூலம், இறக்குமதியாளர் பணம் செலுத்திய பின்னர் அல்லது கடப்பாடுகளை ஏற்றுக்கொண்ட பின்னர் மட்டுமே பொருட்களைப் பெறுவதை உறுதிசெய்கிறது.	இது கடன் கடிதங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த செலவானதாகும், மேலும் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் திறந்த கணக்கு நியதிகள் (Open Account Terms) மற்றும் கடன் கடித பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையில் சமநிலையைக் காண விரும்பும் நம்பகமான வர்த்தக உறவுகளுக்கு ஏற்றதாகும். இந்த செயல்முறை, ஆவணங்களை கையாளுவதில் வங்கிகள் நடுநிலையர்களாகச் செயல்படுவதை உள்ளடக்குகிறது. எனவே, மிதமான இடரை ஏற்கும் திறன் கொண்ட நிலையான வர்த்தக கூட்டாண்மைகளுக்கு இது சிறந்ததாகும்.	- நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்டவாறு அல்லது டிஜிட்டல் தளத்தில் உருவாக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தொடர்புடைய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல்.	சேகரிப்புகளுக்கான ஐசீசீ சீரான சட்டவிதிகளின்படி ஆவணங்கள் கையாளப்படும் (URC522) - சமீபத்திய பதிப்பு நடைமுறையில் உள்ளது	- உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
பரிவர்த்தனை அடிப்படையிலான நிதி: இறக்குமதி கடன்கள், விலைப்பட்டியல் நிதியீட்டம், பொதியிடல் பற்று கடன்கள் ஏற்றுமதி பட்டியல் கழிவு மற்றும் மேலதிகப் பற்று வசதிகள் போன்ற தொழிற்படு மூலதன நிதியீட்டல் தயாரிப்புக்கள் இதில் அடங்கும்.	தொழிற்படு மூலதன நிதியீட்டல் வாய்ப்புக்களை உங்களுக்கு வழங்குவதன் மூலம் உங்கள் வர்த்தக சுழற்சியில் உள்ள நிதி இடைவெளிகளை எம்மால் தீர்க்க முடியும் என்பதோடு உங்கள் வணிகத்துக்கு உதவ முடியும்.	- வங்கியால் வழங்கப்பட்டு வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதி - நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல்.	- வாடிக்கையாளர் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவத்துடன் தொடர்புடைய வர்த்தகப் பரிவர்த்தனையையும் (Underlying Trade Transaction) இணைத்துச் சமர்ப்பித்த பின்னர், வங்கி, வாடிக்கையாளர் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பரிவர்த்தனையை செயல்படுத்தும். - தயவுசெய்து பொது நிபந்தனை ஆவணத்தையும் பார்க்கவும்	- நிதியளிக்கும் நாட்களின் எண்ணிக்கைக்கு வட்டி விதிக்கப்படும். - பராதங்கள், ஏனைய கட்டணங்கள், சேவைச் செலவுகள் மற்றும் தரகுகள் தொடர்பாக "வசதி வழங்கும் கடிதத்தை" (Facility Offer Letter) பார்க்கவும்.

கப்பற்றுறை உத்தரவாதங்கள்/விநியோக கட்டளை வழங்குதல்	வாடிக்கையாளர் பொருட்களுக்கான உடனடி அணுகலைப் பெறுகிறார் மற்றும் செலவு கூடிய களஞ்சியக் கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்களைத் தவிர்க்கிறார். நீங்கள் இறக்குமதி செய்யும் பொருட்கள் போக்குவரத்து ஆவணங்களுக்கு முன்பே வந்து சேரும் பட்சத்தில், பொருட்களை விநியோகம் செய்வதற்கு வசதியாக நாங்கள் உங்களுக்கு கப்பற்றுறை உத்தரவாதத்தை வழங்கலாம். கப்பற்றுறை உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம், வாடிக்கையாளர் தாமதக் கட்டணங்களைச் செலுத்த மாட்டார்.	- வங்கியால் வழங்கப்பட்டு வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதி கப்பல் கம்பனியிலிருந்து இழப்பீட்டு படிவத்தின் பிரதிகள், கப்பல் வார நாமத்தின் விலைப்பட்டியல் மற்றும் விலைப்பற்றுச் சீட்டின் பிரதி என்பவற்றுடன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தல்,	விலைப்பற்றுச் சீட்டுக்கள் மற்றும் போக்குவரத்து ஆவணங்களின் பிரதிகளுடன் இழப்பீட்டுப் படிவத்தை சமர்ப்பித்தல்	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
ஏதேனும் ஏனைய உத்தரவாதம்: (செயலாற்றுகை முறிகள் பிணைமுறிகள், விலைமனு உத்தரவாதங்கள், சுங்க உத்தரவாதம்):	ஒப்பந்ததாரருக்கு ஏலம் விடவும், ஒப்பந்தத்தின் கீழ் கடப்பாடுகளைச் செய்யவும். செயல்படற்ற நிலைமை ஒன்றின் போது செலுத்துவதற்கு வாடிக்கையாளரின் சார்பில் வங்கியினால் வழங்கப்படுகின்ற பொறுப்பேற்பு.	வங்கியால் வழங்கப்பட்டு வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதி. நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட அல்லது டிஜிட்டல் தளத்தில் உருவாக்கப்பட்ட உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல்.	வெளிநாட்டு உத்தரவாதம் ஒன்று வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தொடர்புடைய ஆதரவு ஆவணங்கள் மற்றும் சத்தியக்கூற்றொன்று என்பவற்றுடன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல். (வெளிநாட்டு உத்தரவாதங்கள் அந்நிய செலாவணி ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டவை)	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
முன்னரே பணம் அனுப்புகைகள்/ நேரடி பணம் அனுப்புகைகள்	. வெளிநாட்டுப் பயனாளிகளுக்கு இறக்குமதிப் பணம் செலுத்துவதற்காக, டெலி-கிராப் பரிமாற்றல் / கோரிக்கை வரைவுகள் போன்றவற்றின் மூலம் பணம் செலுத்துவதற்கான விரைவான திருப்பம்.	- நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்களால் கையொப்பமிடப்பட்ட உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல். - ஆடிப்படையான பரிமாற்றலின் ஆதரிக்கின்ற ஆவணங்கள். படிவம் 1 (தேவைப்பட்டால்)	- கொடுப்பனவை மேற்கொள்வதற்கு கணக்கில் நிதிகள் இருப்பு. - தயவுசெய்து பொது நிபந்தனை ஆவணத்தையும் பார்க்கவும்	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
ஏதேனும் இறக்குமதி பரிவர்த்தனைகளில் ஆலோசனை சேவைகள். **இறக்குமதி-துறை பரிவர்த்தனைகளை கட்டமைப்பதற்கான நிபுணர் ஆலோசனை**	- **கீழ்க் குறிப்பிடுகின்ற விடயங்கள் தொடர்பில், இறக்குமதி பரிவர்த்தனைகளுக்கான எங்கள் ஆலோசனை சேவைகள்**, சர்வதேச வர்த்தகத்தின் சிக்கல்களைத் தாண்டி இயங்கும் வணிகங்களுக்கான நிபுணத்துவ வழிகாட்டலை வழங்குகின்றன. நீங்கள் இறக்குமதியில் புதியவராக இருந்தாலும் அல்லது உங்கள் விநியோகச் சங்கிலியின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு விரும்பினாலும், எங்கள் நிபுணர்கள் பின்வருமாறு தனிப்பயன் தீர்வுகளை வழங்குகின்றனர்: - **வர்த்தக நிதி சாதனங்கள்:** - இடர் மற்றும் செலவு திறமையை (Risk and Cost Efficiency) கருத்தில் கொண்டு சரியான செலுத்தும் முறைகளை (கடன் கடிதங்கள், ஆவணச் சேகரிப்புக்கள், வங்கி உத்தரவாதங்கள்) தேர்வு செய்ய உதவுதல். - **சட்ட ஒழுங்குறுத்துகைக்கு இணங்குதல்:** - எல்லைத் தாண்டிய பரிவர்த்தனைகள் சீராக நடைபெறுவதற்கான இறக்குமதி/ஏற்றுமதி விதிமுறைகள் தொடர்பான வழிகாட்டல். - **ஆவணங்கள் மற்றும் செயல்முறை மேம்பாடு:** - ஆவணக் கடன் நியதிகளுக்கு ஏற்ப கப்பல் ஆவணங்களைத் தயார் செய்வதில் மற்றும் பரிசீலிப்பதில் உதவி.	- மேலதிக விபரங்களுக்கு உங்கள் உறவு முகாமையாளரை.'. வாடிக்கையாளர் சேவை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும் -		கட்டமைப்புக்கு ஏற்ப இருக்கும்.

	- **இடர் குறைப்பு (Risk Mitigation):** - கொடுப்பனவு செலுத்தாமை அல்லது கபபலில் அனுப்புதல் பிரச்சினைகளுக்கு எதிராக பாதுகாப்பதற்கான மூலோபாயங்களுடன நாடு, நாணயம், மற்றும் எதிர்கால பரிவர்த்தனைத் தரப்பின் இடர்களை மதிப்பீடு செய்தல். இடர்களைக் குறைத்து, செலவுகளை குறைத்து, செயல்திறனை மேம்படுத்த விரும்பும் இறக்குமதியாளர்களுக்கான எங்கள் ஆலோசனை சேவைகள், சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளை சீராகவும் ஒழுங்குமுறைப்படி செயல்படவுமாக உறுதிசெய்கின்றன. அறிவார்ந்த முடிவுகளை எடுக்க எங்களைத் தொடர்பு கொண்டு, உங்கள் உலகளாவிய வர்த்தக செயல்பாடுகளை வலுப்படுத்துங்கள்.	-		
- **டொய்ஷ் வங்கி நிதியியல் விநியோகச் சங்கிலித் தீர்வுகள்** - விநியோகத்தர் நிதி - கிடைக்கப்பெற வேண்டிய நிதி	தொழிற்படு மூலதன சுழற்சியை மேம்படுத்துவதற்கு வாடிக்கையளருக்கு உதவி செய்தல்	- வங்கியால் வழங்கப்பட்டு வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல்	உரிய உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டும். (உரிமைக்கோரிக்கைகள் செலுத்தப்பட வேண்டிய உடன்படிக்கை/பிரதான பெறப்பட வேண்டியவைகள் தொடர்பான கொள்வனவு உடன்படிக்கைகள்)	நிதியீட்டத்தின் காலத்தின் அடிப்படையில் வட்டி அறவிடப்படும்

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
ஏற்றுமதி சேகரிப்புக்கள்: ஒரு வங்கி வலையமைப்பின் ஊடாக வர்த்தக / கப்பற்றுறை ஆவணங்களை சேகரித்தல்	கொடுப்பனவுக்கு எதிராக அல்லது உரிய திகதியில் செலுத்துவதற்கான ஒரு ஏற்பனவுக்கு எதிராக மாத்திரம் கப்பற்றுறை ஆவணம் இறக்குமதியாளருக்கு விநியோகிக்கப்படும் என்பதால் திறந்த கணக்கு விதிமுறைகளில் வர்த்தகம் செய்வதை விட ஏற்றுமதியாளர்களுக்கான பாதுகாப்பான ஒரு வாய்ப்பாகும்.	நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல்	அமுலில் உள்ள அண்மைய பதிப்பு சேகரிப்புக்களுக்காக ஐசீசீ சீரமைப்பு சட்டவிதிகளுக்கு ஏற்ப ஆவணங்கள் கையாளப்படும்.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
ஆவணக்கடன் உறுதிப்படுத்தல்: உறுதிப்படுத்துகின்ற வங்கியிலிருந்து கொடுப்பனவு அர்ப்பணிப்புக்களின் பிணைப் பொறுப்பு	ஆவணக்கடன் உறுதிப்படுத்தல் என்பது பெறுமதி சேர்க்கப்பட்ட சேவையாகும். இதில் உறுதிப்படுத்தும் வங்கி ஏற்றுமதியாளருக்கு மேலதிக பாதுகாப்பாக, ஆவணக் கடன் அடிப்படையில் கட்டணத்தை உறுதியாக வழங்கும் உத்தரவாதத்தை அளிக்கிறது. ஆவணக் கடன் உறுதிப்படுத்தல், அதிக இடர் வாய்ந்த சந்தைகள் அல்லது அறிமுகம் குறைந்த கொள்வனவாளர்கள் உடன் வணிகம் செய்வதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு விசேடமாகப் பயனளிக்கிறது.	- அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட நிறுவனத்திலிருந்து வேண்டுகோள் படிவம்	- உறுதிப்படுத்தலானது உள்ளக அங்கீகாரத்திற்கு அமைவானது.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
ஆவணக்கடன் ஆலோசனை வழங்கல்: வெளிநாட்டு இறக்குமதியாளரின் வங்கியால் திறக்கப்பட்ட ஒரு ஆவணக் கடன், அதன் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டு உங்களுக்கு விநியோகிக்கப்படும்.	பெரிய உலகலாவிய அடைவு	இறக்குமதியாளர்களின் வங்கியினால் அறிவுறுத்தல்கள்	- அமுலில் உள்ள (UCP) சீரான மரபு மற்றும் வாடிக்கை அண்மைய பதிப்பின் ஆளுகைக்கு உட்படுகின்றது.	உங்கள் கணக்கிற்கு ஏற்புடைய கட்டணங்களுக்காக உங்கள் உறவு முகாமையாளரை அல்லது உங்கள் சேவை முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.
ஆவணக்கடன் (DC) பரிமாற்றல்	கடன் காப்பு தேவைப்படும் திறனீட்டுதல் முகவர்களுடன் பணிபுரியும் கொள்வனவாளர்களுக்கு பொருத்தமானது.	- நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் கையொப்பமிடப்பட்ட கம்பனியிலிருந்து வேண்டுகோள் கடிதம்	- அமுலில் உள்ள (UCP) சீரான மரபு மற்றும் வாடிக்கை அண்மைய பதிப்பின் ஆளுகைக்கு உட்படுகின்றது.	கையாளுதல் தரகாக ஒரு நிலையான கட்டணம் வசூலிக்கப்படும்

குறிப்பு 1- வங்கி, இந்த சேவைகளை கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்குகிறது. மேலே பட்டியல் இடப்பட்டுள்ள சேவைகளில் ஏதேனும் ஒரு நிறுவனம் பெறுவதற்கு, கொழும்பு டொய்ஷ் வங்கியில் கணக்கு ஒன்றை வைத்திருப்பது கட்டாயமாகும்.

குறிப்பு 2- **வங்கியின் உறவு முகாமை அணியை +94-11- 4791301/ 300 / 103** ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு, வங்கியால் வழங்கப்படுகின்ற மேற்கூறிய சேவைகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் மற்றும் அவற்றுக்கு ஏற்புடைய கட்டணங்கள் என்பவற்றையும் தெரிந்துகொள்ளவும்.

டொய்ஷ் பேங்க் ஏஜீ, கொழும்புக் கிளை
பரிமாற்றல் வங்கி சேவைகள் தொடர்பில் முக்கிய தகவல்கள்

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும்	கட்டணங்கள்
சேமிப்பு கணக்குகள்	நேர்மறை இருப்புகளில் வட்டி கிடைக்கப்படும்	வாடிக்கையாளர் பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்: - முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்/பத்திரம் -AOC/SSF. - பணிப்பாளர் சபைத் தீர்மானம்/முறையாக கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதம். - எஸ்எஸ்எப் (SSF) மற்றும் சேமிப்பு கணக்கு நிபந்தனைகளின் ஏற்பனவு. - நிறுவனத்தின் பதிவு தொடர்பான ஆவணங்கள், நிறுவன அமைப்பு அகவிதி, பணிப்பாளர் பட்டியல் போன்றவை. - பணிப்பாளர்களின் அடையாளம் மற்றும் வதிவிட முகவரிகளை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் - ஏனைய ஆவணங்கள்/ ஏற்புடைய சட்டத்தின் அடிப்படையில் வங்கியால் கோரப்பட்ட தகவல்கள்.	- காசோலை புத்தகங்கள் வழங்கப்படமாட்டாது. - கணக்கில் எந்நேரத்திலும் மேலதிகமாகப் பற்ற முடியாது - பொது நிபந்தனைகள், நாட்டின் குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் சேமிப்பு கணக்கைப் பேணுகின்ற நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.	வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் என்பவை வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு இருக்கும்

நடைமுறைக் கணக்குகள்	கோரிக்கையின் பேரில் காசோலை தாள்களில் வாடிக்கையாளரின் பெயர் அச்சிடப்பட்ட காசோலை புத்தகங்களை வங்கி வழங்கும்.	வாடிக்கையாளர் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்: - முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்/பத்திரம் –/ SSF. - பணிப்பாளர் சபைத் தீர்மானம் - எஸ்எஸ்எப் (SSF) வசதிகளை அங்கீகரித்தல் - நிறுவனப் பதிவு தொடர்பான ஆவணங்கள், நிறுவன அமைப்பு அகவிதிகள், பணிப்பாளர் பட்டியல் போன்றவை. - பணிப்பாளர்களின் அடையாளம் மற்றும் வதிவிட முகவரிகளை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் - ஏற்புடைய சட்டத்தின் அடிப்படையில் வங்கியால் கோரப்பட்ட ஏனைய ஆவணங்கள்/தகவல்கள்.	- கணக்கு நிலுவைகளுக்கு கடன் வட்டி செலுத்தப்படுவதில்லை. - பொது நிபந்தனைகள், நாட்டின் குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் நடைமுறைக் கணக்கு பராமரிப்பு நிபந்தனைகள்	கயாளுதல் கட்டணங்கள் என்பவை வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும். காசோலை புத்தகங்கள் வழங்குவதற்கு கட்டணம் விதிக்கப்படும்
உள்வருகை முதலீட்டு கணக்கு (IIA)	IIA தொடர்பில் வெளிநாட்டு நாணய மாற்றல் ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்யலாம்.	மேலே கூறப்பட்ட நடைமுறைக் கணக்குகளுக்கான கணக்கு ஆரம்பிக்கும் ஆவணங்கள் ஏற்புடையதாகும்.	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தகைமைத் தகுதிவிதிகள் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் கடன்கள் - இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இருக்கும்	கையாளுதல் கட்டணங்கள் என்பவை வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்.

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
வதியாதோர் ரூபாய் கணக்கு (NRRA)	இலங்கைக்கு வெளியில் வசிக்கின்ற வெளிநாட்டவர்கள், இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட/ கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்/நிறுவனங்கள், இலங்கையில் அல்லது வெளியில் வசிக்கும் குடியகல்ந்தவர்கள், இலங்கையில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத வெளிநாட்டு வங்கிகள் வெளிநாட்டினருக்காக வதியாதோர் ரூபாய் கணக்குகளைத் திறக்கலாம்	உரிய கணக்கு ஆரம்பிக்கும் ஆவணங்கள்	அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் கடன்கள் – இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப காசோலைப் புத்தகங்கள் வழங்கப்படமாட்டாது	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு (DFA)	வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், தூதரக பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இந்த வகை கணக்கைத் திறக்கத் தகுதியுடையவர்கள்.	உரிய கணக்கு ஆரம்பிக்கும் ஆவணங்கள் - தூதரகம்	நடைமுறை/ சேமிப்பு அல்லது தவணை வைப்பு கணக்குகள் அனுமதிக்கப்படுகின்றன அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் கடன்கள் – இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
இராஜதந்திர ரூபாய்க் கணக்கு (DRA)	வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், தூதரக பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இந்த வகை கணக்கைத் திறக்கத் தகுதியுடையவர்கள்.	உரிய கணக்கு ஆரம்பிக்கும் ஆவணங்கள் - தூதரகம்	நடைமுறை/ சேமிப்பு அல்லது தவணை வைப்பு கணக்குகள் அனுமதிக்கப்படுகின்றன அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் கடன்கள் – இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள் (BFCA)	வதியாதவர்களிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களை சம்பாதிக்கின்ற இலங்கை வதிவாளர்கள்.	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள்	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப. நடைமுறை/ சேமிப்பு அல்லது தவணை வைப்பு கணக்குகள் அனுமதிக்கப்படுகின்றன	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்

வெளிச்செல்லல் முதலீட்டுக் கணக்கு (OIA)	வெளிநாட்டு முதலீடுகளுக்கு வசதி செய்தல்	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள். இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் கடன்கள் – இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கு(BLA)	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப. நடைமுறை பரிமாற்றல் மற்றும் உள்நாட்டு பண வழங்கல் தொடர்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வசதி செய்தல் வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள் (BFCA) வைத்திருப்போருக்கு வசதி அளிப்பதற்காக திறக்கப்பட்ட கணக்கு	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள்.	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
வெளிவாரியான வர்த்தக கடன் கணக்கு (ECBA)	வரவுத் தொகைகள் மற்றும் சேவைக் கடன்களைப் பெறுவதற்கு 3 வருடங்களுக்கும் மேலான கடனுக்காக வதிவற்ற ஒருவரிடமிருந்து கடன் பெறும் இலங்கையில் உள்ள எவரேனும் வதிவுள்ளவர்.	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள் மற்றும் கடன் உடன்படிக்கை	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்
குறுங்காலக் கடன் - எஸ்எப்சீஏ (SFCA)	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப. உற்பத்திக்காக மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தாய்க் கம்பனியிலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அதே குழுமக் கம்பனிகளுக்கு உள்ளேயுள்ள கம்பனி ஒன்றிலிருந்து 3 வருடங்களுக்கும் குறைவான கால அவகாசத்துடன் வெளிநாட்டு நாணயக் (FCY) கடன்களை பெற்றுக் கொள்வதற்கு	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள்.	இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	கையாளுதல் கட்டணங்கள் என்பவை வழங்கப்படுகின்ற விலைப்பட்டியல் மூலம் உறவு முகாமையாளரால் குறிப்பிடப்படுகின்றவாறு வங்கியின் கணக்கு கையாளுதல் கட்டணங்கள் இருக்கும்

கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு – முதலீட்டாளர் (CPCIA-முதலீட்டாளர்)	இலங்கைக்கு வெளியில் வசிக்கும் நபர்கள், இலங்கைக்கு வெளியில் வசிக்கும் நபர்களுக்கு இலங்கையில் முழுமையாகச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான கூட்டு நிறுவனங்கள்	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள்.	சேமிப்பு கணக்குகள் அனுமதிக்கப்படுகின்றன அனுமதிக்கப்பட்ட கடன்கள் - இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தாலும் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவாலும் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	
கொழும்புத் துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு – முதலீடு பெறுநர் (CPCIA-முதலீடு பெறுநர்)	கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக தகுதியுடையவர்கள்.	நிறுவனக் கணக்கு ஆரம்பித்தல் ஆவணங்கள்.	சேமிப்பு கணக்குகள் அனுமதிக்கப்படுகின்றன அனுமதிக்கப்பட்ட கடன்கள் - இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப.	

குறிப்பு 1- வங்கி. இந்த சேவைகளை கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

குறிப்பு 2- குறிப்பிட்ட வங்கிக் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால், அவை உட்பட வங்கியால் வழங்கப்படும் மேற்கூறிய தயாரிப்புக்கள்/சேவைகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கண்டறிவதற்கு +94- 11 -4791 108/ 131 என்ற இலககங்களுக்கு **பணம் செலுத்துதல் மற்றும் தீர்ப்பனவு சேவைகள்** பிரிவுக்கு தொடர்பு கொள்ளவும்.

Deutsche Bank

டொய்ஷ் பேங்க் ஏஜீ, கொழும்புக் கிளை

பிணைப்பத்திரங்கள் தொடர்பான முக்கிய தகவல்கள்

தயாரிப்பு தொடர்பான விபரம்	குறிக்கோள்/அனுகூலங்கள்	வசதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்	கட்டணங்கள்
கூட்டாண்மை மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கட்டுக்காவல் மற்றும் விடுவித்தல் சேவைகள்: - சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் உ+ம்:. பங்குகள் மற்றும் முறிகள். - வர்த்தகங்களின் தீர்ப்பனவு உ+ம்: பங்கு, நிலையான வருமான பிணைப்பத்திரங்கள். - மதிப்பீடுகளுக்காக பண அறிக்கையிடல் மற்றும் பிணைப் பத்திரங்களின் நிலைமைகள். - நிதி முகாமையாளர்களுக்காக பிணைப்பத்திரங்களின் மதிப்பீடுகளை வழங்குதல். கட்டுக்காவலின் கீழ் வைத்திருக்கின்ற பிணைப் பத்திரங்கள் தொடர்பில் தன்னார்வ மற்றும் தன்னார்வமற்ற கூட்டாண்மை நடவடிக்கை சேவைகள்.	வாடிக்கையாளர்கள் ஒரு தனியான பாதுகாவலர் கணக்கின் கீழ் வருவதை உறுதி செய்வதன் மூலம் தங்கள் முதலீடுகளை நெறிப்படுத்த முடியும். வாடிக்கையாளர் பதிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் எவராலும் வர்த்தகம் செய்ய முடியும் மற்றும் ஒரு சில அல்லது சில சந்தை இடைத்தரகர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. முதலீட்டுச் செயல்பாடுகள் முகாமையை வெளிப்புறத் தரப்பினர் ஒருவருக்கு புறத்திறனீட்டுதல் செய்யும் போது முக்கிய செயல்பாடுகளில் கவனம் செலுத்தும் திறன், ஒரே பாதுகாவலரை நியமிப்பதில் உள்ள முக்கிய நன்மைகளில் ஒன்றாகும்.	சேவைகளின் நோக்கத்தை உறுதிசெய்த பின்னர் வாடிக்கையாளர் மற்றும் வங்கிக்கு இடையே. ஒரு கட்டுக்காவல் உடன்படிக்கை போன்ற எழுத்துமூல உடன்படிக்கையை நிறைவேற்றுதல்,	தரப்பினர்களுக்கு இடையில் நிறைவேற்றப்படுகின்ற உடன்படிக்கையின் கீழ் வங்கியால் வழங்கப்படவுள்ள சேவைகளின் நோக்கத்தைப் பொறுத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இருக்கும் தகைமைத் தகுதிவிதிகள்: - டொய்ஷ் வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு வாடிக்கையாளர் வேண்டப்படுகின்றார். வெளிநாட்டு வாடிக்கையாளருக்காக ஒரு உள்வருகை முதலீட்டு கணக்கொன்று (IIA) டொய்ஷ் வங்கியில் ஆரம்பிக்கப்பட வேண்டும். - மத்திய வைப்பக முறையிலும் (CDS) கணக்கொன்றைத் திறக்குமாறு வாடிக்கையாளர் வேண்டப்படுகின்றார். நிதி தொடர்பில் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கீகாரம் தேவைப்படுகின்ற போது அத்தகைய கணக்கை ஆரம்பிக்குமாறு வேண்டப்படும். மத்திய வைப்பக முறையில் கணக்கை ஆரம்பிப்பதற்கு வங்கி	- கட்டுக்காவலில் உள்ள சொத்துக்களின் சதவீதம் ஒன்றின் அடிப்படையில் மாதாந்தக் கட்டணம்.(AUC) - வர்த்தக அடிப்படையில் பரிமாற்றல் கட்டணங்கள்

கூறு நம்பிக்கைக்காக நம்பிக்கை மற்றும் நிதி நிர்வாக சேவைகள்	- கூறு நம்பிக்கையின் சொத்துக்கள் நம்பிக்கையாக வங்கி வைத்திருக்கின்றது. - பின்வருபவை போன்ற நிதி நிருவாக சேவைகளை வங்கி வழங்குகின்றது: - நாளாந்த அடிப்படையில் நிதியின் தேறிய சொத்துப் பெறுமதி மற்றும், கூறு ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலையையும் கணிப்பிடுதல். - காசுப் பாய்ச்சல் அறிக்கையிடுதல் உட்பட நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல். - செயலாற்றுகை அறிக்கையிடுதல் - கணக்காய்வு ஆதரவு - வரி நிர்வாகம் - புள்ளிவியல் தரவு பராமரிப்பு (பிணைப் பத்திரங்கள் மற்றும் சொத்துப்பட்டியல்) - வர்த்தகத்துக்கு பிந்திய இணக்க அறிக்கையிடுதல்	முதலீட்டு முகாமையாளர் மற்றும் வங்கிக்கு இடையில் (நம்பிக்கை உறுதி) எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றை நிறைவேற்றல், இது வங்கியின் வகிபாகத்தைக் குறிப்பிடுகின்றது. நம்பிக்கை உறுதி, நம்பிக்கையாளரால் புரியப்படுகின்ற நம்பிக்கைக்குரிய வகிபாகத்தையும் மற்றும் முதலீட்டாளர்களுக்கான அதன் கடமைகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. முதலீட்டு முகாமையாளரின் வகிபாகத்தையும் இந்த ஆவணம் குறிப்பிடுகின்றது.	தரப்பினர்களுக்கு இடையில் நிறைவேற்றப்படுகின்ற உடன்படிக்கையின் கீழ் வங்கியால் வழங்கப்படவுள்ள சேவைகளின் நோக்கத்தைப் பொறுத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இருக்கும்	நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்களின் சதவீதம் (%) ஒன்றின் அடிப்படையில்

குறிப்பு 1- வங்கி இந்த சேவைகளை கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

குறிப்பு 2- குறிப்பிட்ட வங்கிக் கட்டணங்கள் உட்பட, வங்கி வழங்கும் மேற்கூறிய சேவைகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தெரிந்துகொள்ள, +94 -11- 4791 137 **என்ற இலக்கத்திற்கு பிணையங்கள் சேவைகளைத்** தொடர்பு கொள்ளவும்.